1981 ஏப்ரல் 22]

அளவிற்கு, போதிய தண்ணீர் வரத்து இல்லை எனத்தெரிந்ததால் இத்திட்டம் கைவிடப்பட்டது என்றும், இது தவிர ரூபாய் 5.30 லட்சத்தில் கல்லர் ஓடையின் குறுக்கே முத்துக்குமாரபுரம் அருகில் ஒரு அணை கட்டவும், விளாத்திக்குளம் வட்டத்தில் உள்ள குளத்தூர் தெற்கு கண்மாய்க்குச் செல்லும் கால்வாயை சீர் செய்யவும் ஒரு திட்டம் போடப்பட்டு ஆய்வில் உள்ளது என்றும் சிறு பாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

குமரி மாவட்டம் பன்றி வாய்க்காலில் செல்லும் நீரை மேலேற்றிப் பாசனத்திற்குப் பயன்படுத்துதல்.

வினா எண் 845—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குமரி மாவட்டத்தில் பன்றி வாய்க்கால் ஓடையில் வீணாக கடலில் சென்று கலக்கும் தண்ணீரை மேலேற்றி (Lift Irrigation) பாசனத்திற்கு பயன்படுத்தும் திட்டம் செயல்படாமல் இருப்பதின் காரணம் என்ன?

(ஆ) விரைவில் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

விடை—

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பன்றி வாய்க்காலில் செல்லும் நீரை மேலேற்றி (Lift Irrigation) பாசனத்திற்கு பயன்படுத்துவதற்கான திட்டத்தின் முதல் நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, திட்டத்தை விரிவாக ஆராய்ந்ததில் பொருளாதார ரீதியாக இது ஒரு ஆதாயமற்ற திட்டம் (Uneconomical) என்று தெரிய வந்ததால், இத்திட்டத்திற்கான மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை என சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

பெரும்பள்ளம் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம்.

* வினா எண் 846—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?—

(அ) கோபி வட்டம் கெம்மநாய்க்கன் பாளையம் பெரும்பள்ளம் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் ஆய்வு செய்யப்பட்டு, மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

வைகைக் கால்வாய் சீரமைப்புப்பணி

*வினா எண். 847—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதியில் வைகைக் கால்வாயைச் சீரமைக்கும் பணி தொடங்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வரும் பெரியாறு வைகை நவீனப்படுத்தும் திட்டத்தில், 28 கி.மீ. நீளமுள்ள திருமங்கலம் பிரதான கால்வாய் மற்றும் அதன் 22 கி.மீ. நீளமுள்ள கிளைக் கால்வாய்கள் சீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. திருமங்கலம் பிரதான கால்வாயின் பங்கீட்டு கால்வாய்களுக்கு (Distributories) தளமிடும் பணி நடைபெற்று வருகிறது.

சேளூர் பகுதியில் கிடைக்கும் அபிரகம்

* வினா எண் 848—திரு. இல. பலராமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) வடஆற்காடு மாவட்டம், போளூர் வட்டாரம், சேளூர் பகுதியில் பூமிக்கடியில் அபிரகம் என்னும் பொருள் கிடைப்பது உண்மையா?—

(ஆ) இதுகுறித்து பரிசீலிக்கப்பட்டதா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) ஆம்.